பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 12 2024   MONDAY                                                                                    7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மத்திய அரசு, தொழில் நிறுவனங்கள் மற்றும் மாநில அரசுகளின் வரி நிர்வாகத்தின் இணைப்புப்பாலமாக இந்திய வருவாய்ப்பணி அதிகாரிகள் திகழ்வதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

- நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

- இளையோருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குவதற்கென நாடு முழுவதும் 202 சீர்மிகு மையங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர திரு ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

- இந்தியா – மலேசியா இடையேயான கூட்டு ராணுவப்பயிற்சி இன்று தொடங்கியது.

- ஹாங்காங் ஓபன் ஸ்குவாஷ் போட்டி இன்று தொடங்கியது.

<<<<<<>>>>>>

மத்திய அரசு, தொழில் நிறுவனங்கள் மற்றும் மாநில அரசுகளின் வரி நிர்வாகத்தின் இணைப்புப்பாலமாக இந்திய வருவாய்ப்பணி அதிகாரிகள் திகழ்வதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இன்று குடியரசுத் தலைவர் மாளிகையில், இந்த பணி அதிகாரிகள் இடையே உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச அளவில் பொருளாதார ஒத்துழைப்பிற்கும் இந்த பணி அதிகாரிகள் ஆற்றிவரும் சேவை முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறினார்.

பல்வேறு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக ஒப்பந்தங்களிலும், இவர்கள் இன்றியமையா பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று இதுதொடர்பாக, அனைத்துக்கட்சி தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு பேசியபோது, அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

இந்த கூட்டத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற ஒத்துழைப்பு அளிக்கப்படும் என்று எதிர்க்கட்சிகள் இக்கூட்டத்தில் உறுதி அளித்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 32 கோடிக்கும் மேற்பட்டோர் சமையல் எரிவாயு இணைப்பு பெற்றுள்ளதாக பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், பிரதமரின் இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தின்கீழ், 10 கோடிக்கும் மேற்பட்டோர் பயன்பெற்று வருவதாக கூறினார்.

சமையல் எரிவாயு பயன்பாடும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக திரு சுரேஷ் கோபி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஆயுஷ் துறை கடந்த பத்தாண்டுகளில் பெருமளவு வளர்ச்சி கண்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு ஸ்ரீபத் யசோ நாயக் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சர்வதேச யோகா தினம் பெரும்பாலான நாடுகளில் தற்போது கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டினார்.

ஆயுஷ் துறை சார்ந்த வர்த்தகமும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த துறையின் வளர்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தனி கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

இளையோருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குவதற்கென நாடு முழுவதும் 202 சீர்மிகு மையங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி, 36 துறைகளில் திறன் பயிற்சி வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

தொழில்துறையினரும் இதில் மத்திய அரசோடு இணைந்து பணியாற்றி வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த சீர்மிகு மையங்கள் மூலம், திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுவதோடு வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்படுவதாக திரு ஜெயந்த் சௌத்ரி கூறினார்.

<<<<<<>>>>>>

கள்ளநோட்டு புழக்கம் வெகுவாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி, இதுதொடர்பான புள்ளி விவரங்களையும் எடுத்துரைத்தார்.

இதுதொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் திட்டத்தின் காரணமாக, கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 28 ஆயிரம் கோடி ரூபாய் சேமிப்பு கிடைத்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த திட்டத்தின்கீழ், விவசாயிகளும் பெருமளவு பயனடைந்துள்ளதாக பெட்ரோலியத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கு சர்வதேச அளவில் கூட்டு நடவடிக்கைகள் அவசியமாகிறது என்று வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பு உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

ரஷ்யா - உக்ரைன், அமெரிக்கா - சீனா ஆகிய நாடுகளுக்கு இடையே நிலவிவரும் பிரச்சினை பற்றி குறிப்பிட்ட அவர், கூட்டு முயற்சியின் மூலம் இதற்கு தீர்வுகாண முடியும் என்றார்.

அமெரிக்கா - இந்தியா உடனான நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா, பிரதமர் திரு நரேந்திர மோடியை புதுதில்லியில் இன்று சந்தித்து பேசினார்

அஸ்ஸாமில் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ள முதலீட்டாளர் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்ததாக இந்த சந்திப்புக்குபின் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், அஸ்ஸாமின் வளர்ச்சிக்கு பிரதமர் உரிய முன்னுரிமை அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

முதலீட்டாளர் மாநாட்டிற்கான தொடக்க விழாவில் பெரிய அளவிலான கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாகவும் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் நாளை மறுநாள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் கட்சியின் மத்திய பார்வையாளர்களாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், குஜராத் முதலமைச்சர் திரு விஜய் ரூபானி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

புதிய அரசு வரும் வியாழக்கிழமை பதவியேற்க உள்ளதாக கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

288 உறுப்பினர்களை கொண்ட மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பிஜேபி 132 தொகுதிகளிலும், அதன் கூட்டணி கட்சியான சிவசேனா 57 தொகுதிகளிலும், தேசியவாத காங்கிரஸ் 41 தொகுதிகளிலும் வெற்றிபெற்றன.

<<<<<<>>>>>>

இந்தியாவுடன் சிவில் விமான போக்குவரத்துத்துறையில ஒத்துழைப்பை வலுப்படுத்த விரும்புவதாக ஐக்கிய அரபு எமிரேட் கூறியுள்ளது.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த இந்தியாவுக்கான ஐக்கிய அரபு எமிரேட்டின் தூதர் திரு Abdulnasser Alshaali இருநாடுகளுக்கும் இது நன்மை பயக்கும் என்றார்.

செயற்கை தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளிலும் ஒத்துழைப்பு வலுப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

இதுதொடர்பான விரிவான திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாகவும் திரு Abdulnasser Alshaali தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சர்வதேச கடல்சார் மாநாடு சென்னையில் நாளை மறுநாள் தொடங்கி வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

15 ஆண்டுகளுக்கு பிறகு இந்த மாநாடு இந்தியாவில் நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பல்வேறு நாடுகளை சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

<<<<<<>>>>>>

மிசோரமில் 68 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை பாதுகாப்புப்படையினர் பறிமுதல் செய்தனர்.

அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையினர் மற்றும் மிசோரம் மாநில காவல்துறையினரும் இணைந்து மேற்கொண்ட சோதனைகளின்போது இது பறிமுதல் செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

இந்தியா – மலேசியா இடையேயான கூட்டு ராணுவ பயிற்சி இன்று தொடங்கியது.

மலேசியாவின் Bentong ராணுவ முகாமில் இந்த பயிற்சி நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்திய ராணுவத்தின் சார்பில் 78 பேரும், மலேசிய ராணுவத்தின் சார்பில் 123 பேரும் இந்த பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<>>>>>>

நேபாளத்தின் பிரதமர் திரு கே பி சர்மா ஒலி, நான்கு நாள் அரசு முறைப்பயணமாக சீனா புறப்பட்டு சென்றார்.

சீன அதிபரின் அழைப்பை ஏற்று அவர் இப்பயணத்தை மேற்கொண்டிருப்பதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

அந்நாட்டு அதிபருடனும், இதர தலைவர்களுடனும், நேபாள பிரதமர் பேச்சு நடத்தவுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அதிகனமழையும், கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு மாவட்டங்களில் கனமுதல் மிக கனமழையும் பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தொடர் மழை காரணமாக, விழுப்புரம், கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலையில் மண் சரிவினால் ஏற்பட்ட இடர்பாடுகளில் சிக்கிய ஏழு பேர்களில் 3 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஹாங்காங் ஓபன் ஸ்குவாஷ் போட்டி இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் Ramit Tandon பங்கேற்றுள்ளார்.

---------------

ஆசிய கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப்போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மனிஷா ஜோதி சிங் தலைமையிலான இந்த அணியில் 18 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி, மஸ்கட்டில் வரும் 7-ஆம் தேதி தொடங்கி, 15-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

--------------------

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா 211 ரன் வித்தியாசத்தில் ஜப்பானை வென்றது.

ஷார்ஜாவில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்ற ஜப்பான் முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து, பேட் செய்த இந்தியா தொடக்கம் முதலே அதிரடியாக ஆடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில், 6 விக்கெட் இழப்பிற்கு 339 ரன் எடுத்தது.

Mohamed Amaan அதிரடியாக ஆடி 118 பந்துகளில் 122 ரன் குவித்தார்.

340 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த ஜப்பான், 8 விக்கெட் இழப்பிற்கு 128 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

----------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன் போட்டியை நடத்த இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

---------------

தேசிய விளையாட்டுப் போட்டிகள் உத்தராகண்டில் அடுத்த மாதம் 28-ஆம் தேதி தொடங்கி, பிப்ரவரி மாதம் 14-ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

36 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<END>>>>>>